12T

# கன்னியாகுமரி மாவட்டம்

## அடிப்படை புறநிலை மதிப்பீடு - அக்டோபர் 2021

www.tnschools.co.in

வகுப்பு 12

பொதுத்தமிழ்

நேரம்: 1.15 மணி | மதிப்பெண்கள்: 50

**குறிப்பு:** (விடை எழுதும் போது, கொள்குறி மற்றும் விடையையும் சேர்த்து எழுத வேண்டும். கொள்குறி மட்டுமோ விடை மட்டுமோ எழுதினால் மதிப்பெண் வழங்கப்படாது)

**I. பலவுள் தேர்க: (உரைநடை உலகம்)** **10×1=10**

1) இந்தப் பேரண்டத்தின் செய்தி
அ) அறிவு ஆ) அழகு இ) உணர்வு ஈ) உண்மை

2) தி.சு. நடராசன் எழுதிய நூல்
அ) பண்பாட்டு அசைவுகள் ஆ) மொழியென்னும் பெருவரம்
இ) தமிழின் பண்பாட்டு வெளிகள் ஈ) தமிழர் பண்பாடு

3) மொழியின் செறிவாக்கப்பட்ட ஒரு வடிவமைப்பு இது
அ) மறுதலைத் தொடர் ஆ) சொல் விளையாட்டு
இ) தொடர் மொழி ஈ) தொகை மொழி

4) இவற்றுள் தி.சு. நடராசன் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றாத பல்கலைக்கழகம்
அ) பாரதியார் பல்கலைக்கழகம்
ஆ) வார்சா பல்கலைக்கழகம்
இ) மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
ஈ) காமராசர் பல்கலைக்கழகம்

5) கலையும் பண்பாடும் வரலாறும் அரசியலும் பொதிந்து கிடக்குமிடம்
அ) சொல் ஆ) பயன் இ) சூழல் ஈ) இசை

6) தொல்காப்பியம் பாவகைகளோடு இணைந்து சொல்லும் கருத்து
அ) அறிவியல் ஆ) அறவியல் இ) களவியல் ஈ) கற்பியல்

7) ஓசையும் பொருளும் இணைந்து உருவாகும் கலை வடிவத்தின் பெயர்
அ) கவிதைத்தனம் ஆ) மொழியின் இயல்பு
இ) ஒலிப்பின்னல் ஈ) தொடரியல் பிறழ்வு

8) 'தொடியுடைய தோள் மணந்தன்' - யார்?
அ) பேரெயின் முறுவலார் ஆ) கி. ராஜ நாராயணன்
இ) நம்பி நெடுஞ்செழியன் ஈ) பாரி

9) காளைகளில் பல இனங்களைக் காட்டுகிற சொற்கள் நிரம்பிக் கிடக்கும் நூல்
அ) கிடை ஆ) தொல்காப்பியம்
இ) குறிஞ்சிக் கலி ஈ) முல்லைக் கலி

10) கூற்று - 1 : கவிதைக்கலை ஏனைய் கலைகளில் இருந்து வேறுபட்டது.
கூற்று - 2 : இலக்கியத்தின் நோக்கம், கலை உருவாக்கத்தின் போதே சரிவர இணைந்திருக்க வேண்டும்.
அ) கூற்று இரண்டும் சரி ஆ) கூற்று இரண்டும் தவறு
இ) கூற்று 1 சரி, 2 தவறு ஈ) கூற்று 1 தவறு, 2 சரி

**II. பலவுள் தெரிக: (கவிதைப் பேழை)** **15×1=15**

11) பொருத்தமற்றதைத் தேர்வு செய்க.
அ) மாறனலங்காரம் ஆ) வீரசோழியம்
இ) தண்டியலங்காரம் ஈ) குவலயானந்தம்

12) இவற்றுள் நிகழ்கால இடைநிலை பயின்றுவரும் சொல்
அ) இருந்தாய் ஆ) விம்முகின்ற இ) சாய்ப்பான் ஈ) தந்தாய்

13) இவற்றுள் உரைநடை நூல் எது?
அ) இன்று ஆ) மழைக்குப் பிறகும் மழை
இ) சூரிய நிழல் ஈ) மலையாளக் கவிதை

14) இருவேறு பொருள்களுக்கிடையே ஒற்றுமையை முதலில் கூறிப் பின் வேறுபடுத்திக் காட்டுவது

அ) பொருள் பின்வருநிலை அணி ஆ) பொருள் வேற்றுமை அணி

இ) சொல் பின்வருநிலை அணி ஈ) சொல் வேற்றுமை அணி

15) சிற்பி. பாலசுப்பிரமணியத்தின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற நூல் எது?

அ) ஒரு கிராமத்து நதி ஆ) சர்ப்ப யாகம்

இ) ஒளிப்பறவை ஈ) நிலவுப்பூ

16) 'வெங்கதிர்' - பிரிக்கும் முறையில் சரியானதைத் தேர்ந்தெடு.

அ) வெம்+கதிர் ஆ) வெண்மை+கதிர்

இ) வெம்மை+கதிர் ஈ) வெங்+கதிர்

17) 'இ ஈ ஐ வழி யவ்வும்' என்னும் விதி பயின்று வரும் சொல்

அ) உன்னையல்லால் ஆ) வானமெல்லாம்

இ) ஆங்கவற்றுள் ஈ) இருளகற்றும்

18) 'காவியதர்சம்' என்னும் நூலைத் தழுவி எழுதப்பட்ட நூல்

அ) முத்து வீரியம் ஆ) மாறனலங்காரம்

இ) இலக்கண விளக்கம் ஈ) தண்டியலங்காரம்

19) மொழிபெயர்ப்புக்காகவும் சாகித்திய அகாதெமி விருது பெற்றவர்

அ) அய்யப்ப மாதவன் ஆ) தி.சு. நடராசன்

இ) சிற்பி பாலசுப்பிரமணியம் ஈ) பாரதியார்

20) இவற்றுள் பெயரெச்ச விகுதி கொண்ட சொல்

அ) விளங்கி ஆ) வியந்து இ) ஈன்று ஈ) எழுந்த

21) தமிழ்க்குயில் - என்பதன் இலக்கணக்குறிப்பு

அ) உருவகம் ஆ) உவமைத்தொகை

இ) உம்மைத்தொகை ஈ) இருபெயரொட்டுப் பண்புத்தொகை

22) 'பிறகொரு நாள் கோடை' - கூறும் பார்க்கத் தெவிட்டாத அழகு ...........

அ) வெயில் காயும் நகரம் ஆ) பளபளக்கும் மரக்கிளை

இ) மழையினூடே வெயில் வரும் வேளை ஈ) மரக்கிளையில் சொட்டும் நீர்த்துளி

23) தமிழின் விரிவை உணர்த்த புலவர் கையாளும் தொடர்

அ) நிலத்தினும் பெரிது ஆ) வானினும் உயர்ந்தன்று

இ) கடலினும் ஆழமானது ஈ) ஓங்கலிடை வந்தது

24) 'பகலும் இரவும் சந்திக்கும் அந்தி அழகு' - இத்தொடர் காட்டும் உண்மை

அ) இருவேறு பொருள்களிடையே உள்ள ஒற்றுமையைக் காட்டுகிறது.

ஆ) இருவேறு பொருள்களிடையே உள்ள வேற்றுமையைக் காட்டுகிறது.

இ) மொழிக்குள் இருக்கும் ஒரு வலிமை மிக்க ஆற்றலை வெளிப்படுத்துகிறது.

ஈ) மாறுபட்ட இரண்டு இணைகிற போது புலப்படும் புது அழகை வெளிப்படுத்துகிறது.

25) **பொருத்தி விடை தேர்க:**

| | | | |
|---|---|---|---|
| அ) கவிதை வெறிக்கு உணவு | - | 1. | வானம் |
| ஆ) செந்நிறத்துப் பூக்காடு | - | 2. | வியர்வை |
| இ) முத்துமுத்தாய் வீற்றிருப்பது | - | 3. | வள்ளல்களைத் தந்தது |
| ஈ) பழமை நலம் | - | 4. | முத்தமிழ் |

அ) 4, 1, 2, 3 ஆ) 4, 2, 3, 1 இ) 1, 3, 2, 4 ஈ) 4, 3, 1, 2

**III. பலவுள் தெரிக: (விரிவானம்)** **5×1=5**

26) வ.உ. சிதம்பரனாரின் வாழ்க்கை வரலாற்று நூலை எழுதியவர்

அ) பாரதியார் ஆ) பரலி. சு. நெல்லையப்பர்

இ) குத்திகேசவர் ஈ) உ.வே. சாமிநாதர்

27) இளசைமணி என்பவரால் மறுபதிப்பாக வெளியிடப்பட்ட நூல்

அ) உய்யும் வழி ஆ) வம்சமணி தீபிகை

இ) பாரதி கடிதங்கள் ஈ) பாரதி வாழ்த்து

28) 'நெல்லைத் தென்றல்' என்னும் நூல்

அ) கவிதை நூல் | ஆ) உரைநடை நூல்
இ) கடித இலக்கியம் | ஈ) வரலாற்று நூல்

29) பாரதியின் பாப்பா பாட்டைப் பதிப்பித்தவர்

அ) தமிழ்த்தென்றல் | ஆ) ரா. அ. பத்மநாபன்
இ) வெங்கடேசுர எட்டப்பர் | ஈ) பரலி. சு. நெல்லையப்பர்

30) கூற்று - 1 : பாரதியாரின் கடிதங்கள், நம்மிடம் பேசுவது போல இருப்பதே அவருடைய நடையழகின் சிறப்பு.

கூற்று - 2 : கடிதங்களை இலக்கியமாக்கும் எழுத்தாளர்கள், மொழிக்கு அதன் வழியாகத் தனி அழகை உருவாக்கித் தருகிறார்கள்.

அ) கூற்று இரண்டும் சரி | ஆ) கூற்று இரண்டும் தவறு
இ) கூற்று 1 சரி, 2 தவறு | ஈ) கூற்று 1 தவறு, 2 சரி

## IV. பலவுள் தெரிக: (இலக்கணம்) 15×1=15

31) எழுதும்போது ஏற்படும் பிழைகளை வகைப்படுத்துவதில் தவறான ஒன்றைத் தேர்க.

அ) எழுத்துப்பிழை | ஆ) சொற்பொருட் பிழை
இ) சொற்றொடர் பிழை | ஈ) மொழி பற்றிய ஆழ்ந்த அறிவு

32) மெய்யெழுத்துகளின் வகைகளின் எண்ணிக்கை

அ) இரண்டு | ஆ) மூன்று | இ) நான்கு | ஈ) ஐந்து

33) எழுத்துப் பிழைக்கு முதன்மையான காரணம்

அ) எழுதுவதைப் போல பேசுவது | ஆ) பேசுவது போல எழுதுவது
இ) மனப்பாடம் செய்வது | ஈ) அதீத மொழி அறிவு

34) தமிழில் பிழை இல்லாமல் எழுத வழி

கூற்று - 1 : மொழியின் இயல்பை உணர்ந்தும் இலக்கண விதிகளை அறிதல்.

கூற்று - 2 : சிறிதளவு முயற்சியும் பயிற்சியும் செய்தல்.

அ) கூற்று இரண்டும் சரி | ஆ) கூற்று இரண்டும் தவறு
இ) கூற்று 1 மட்டும் சரி | ஈ) கூற்று 2 மட்டும் சரி

35) தமிழில் சொல்லின் தொடக்கத்திலும் இறுதியிலும் வரும் எழுத்துகள்

அ) மெய்யெழுத்துகள் | ஆ) ஆய்த எழுத்து
இ) இடையின எழுத்துகள் | ஈ) உயிர் எழுத்துகள்

36) தமிழில் ஏற்படும் பிழைகளைத் தவிர்க்கும் பின்வரும் கூற்றுகளுள் தவறானது

அ) எழுத்தினைத் தெளிவாக உச்சரிக்கப் பழகுதல்

ஆ) இனவெழுத்துகள் வரும் முறையையும் அவை ஏற்படுத்தும் பொருள் மாற்றத்தையும் அறிதல்

இ) வாய்விட்டோ அல்லது மனதுக்குள் உச்சரித்தபடியோ எழுதப் பழகுதல்

ஈ) மெதுவாக எழுத முயற்சித்தல்

37) பின்வருவனவற்றுள் தமிழ் மரபுக்கேற்ற சரியான சொல்

அ) கர்மம் | ஆ) கற்மம் | இ) கருமம் | ஈ) கர்மன்

38) வருமொழி தகரமாயின் லகரம் றகரமாக மாறுவதோடு தகரமும் றகரமாக மாறும் - என்ற புணர்ச்சிக்குச் சான்று

அ) நாண்மீன் | ஆ) சொற்றுணை | இ) பன்னூல் | ஈ) பஃறுளி

39) உலக மொழிகள் அனைத்திலும் மிகுந்திருக்கும் சொற்கள்

அ) பெயர்ச்சொற்கள் | ஆ) வினைச்சொற்கள்
இ) இடைச்சொற்கள் | ஈ) உரிச்சொற்கள்

40) ''உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை என்மனார் அவரல பிறவே'' -
என்னும் நூற்பா இடம்பெற்றுள்ள நூல்

அ) இலக்கண விளக்கம் | ஆ) தொன்னூல் விளக்கம்
இ) நன்னூல் | ஈ) தொல்காப்பியம்

41) இக்காலத் தமிழில் தனி வினைமுற்றுகள் இல்லாதது

அ) அஃறிணைப் பன்மை ஆ) அஃறிணை ஒருமை

இ) உயர்திணை பன்மை ஈ) உயர்திணை ஒருமை

42) ஒரு மொழியில் அடிப்படை அறிவு என்பது அந்த மொழியில் உள்ள எழுத்துகளையும் சொற்களையும் அவற்றின் பொருளையும் வாக்கிய அமைப்புகளையும் தெரிந்திருப்பதே. மேலே குறிப்பிட்ட நான்கையும் உள்ளடக்கியதே ஒரு மொழியின் இலக்கணம் - இக்கூற்று இடம் பெற்றுள்ள நூல்

அ) தமிழ்மொழியின் நடை அழகியல் ஆ) தமிழ் நடைக் கையேடு

இ) தமிழ் மொழி வரலாறு ஈ) தமிழ் மொழியியல்

43) தமிழில் திணைப் பாகுபாடு ........... அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.

அ) பொருட்குறிப்பு ஆ) சொற்பகுப்பு

இ) தொடர்க்குறிப்பு ஈ) எழுத்துக்குறிப்பு

44) பால்காட்டும் விகுதிகள் இன்றியும் உயர்திணைப் பெயர்ச்சொற்கள் தத்தம் பால் உணர்த்துகின்றன என்பதற்குப் பொருத்தமில்லாதது

அ) ஆண் - பெண் ஆ) அப்பா - அம்மா

இ) தம்பி - தங்கை ஈ) கடுவன் - மந்தி

45) மொழியின் சொற்றொடர் அமைப்பை விளங்கிக் கொள்வதற்கும் பயன்படுத்துவதற்கும் உதவுவன

அ) திணை, பால் ஆ) எண், இடம்

இ) திணை மட்டும் ஈ) மேற்கண்டவை அனைத்தும்

V. பலவுள் தெரிக: (மொழியை ஆள்வோம்) **5×1=5**

46) Fiction - என்பதன் தமிழாக்கம்

அ) நூல்நிரல் ஆ) வாழ்க்கை வரலாறு இ) ஆவணம் ஈ) புனைவு

47) தவறான இணையைக் கண்டறிக.

அ) பாரதியின் கடிதங்கள் - ரா. அ. பத்மநாபன்

ஆ) காட்டு வாத்து - அகிலன்

இ) சுவரொட்டிகள் - ந. முத்துசாமி

ஈ) தமிழ் அழகியல் - தி.சு. நடராசன்

48) பொருத்தித் தேர்க:

அ) Platform - 1. இருப்புப் பாதையைக் கடக்குமிடம்

ஆ) Train track - 2. தொடர்வண்டி வழிக்குறி

இ) Railway signal - 3. இருப்புப்பாதை

ஈ) Level crossing - 4. நடைமேடை

அ) 1, 2, 4, 3 ஆ) 4, 3, 1, 2 இ) 4, 3, 2, 1 ஈ) 1, 2, 3, 4

49) பசுமை வளாக இயக்கத்தைத் தோற்றுவித்தவர்

அ) வங்காரி மத்தாய் ஆ) மனோரமா பிஸ்வாஸ்

இ) பெர்சிவல் பாதிரியார் ஈ) ஆறுமுக நாவலர்

50) ''முச்சங்கங் கூட்டி
முதுபுலவர் தமைக் கூட்டி
அச்சங்கத் துள்ளே
அளப்பரிய பொருள் கூட்டி''

- இப்பாடலடிகளில் அமைந்துள்ள நயங்கள்

அ) எதுகை, இயைபு ஆ) அடிமோனை, இயைபு

இ) இவற்றில் எதுவுமில்லை ஈ) இவை அனைத்தும்

----------